5 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு


“சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாணிக் கெல்லா மெடுத்தோதுவோமே”

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா $4\frac{1}{2}$ ரூபா

ஆசிரியர்.
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

காரியாலயம்: பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. திங்கள் 6-2-33

அக் கையை தடுத்தது யார்?



காந்தி என்ற கிளியின் விடுதலையைப் பற்றிப் பல பல விதமான வதந்திகள் உலவுகின்றன. சில மாதங்களுக்கு முன்னே வில்லிங்டன் காந்திஜியை விடுதலை செய்ய விரும்பியதாகவும், வஸ்தாத் ஹோர் தடுத்து விட்டதாகவும் ஓர் வதந்தி வந்தது. இன்னொரு சமயம் ஸாமுயேல் ஹோர் விரும்பியதாகவும் பயில்வான் வில்லிங்டன் தடுத்ததாகவும் இன்னொரு வதந்தி கூறிற்று. விடுதலை செய்ய விரும்பிய கையை உண்மையில் தடுத்தது யாரோ?

மிளகாய் கடித்தாற் போல

"தன் காது கேட்க இரண்டு பேருடைய நாமதேயங்களையும் உச்சரிக்கக் கூடாதென்று வைஸ்ராய் வில்லிங்டன் உத்தர விட்டிருக்கின்றாராம். ஒருவர் பெயர் காந்தி; இன்னொருவர் பெயர் இர்வின்" என்று 'டைம் அண்ட் டைட்' என்ற சீமைப் பத்திரிகையில் ஒருவர் எழுதியிருக்கிறார். காந்தி என்ற பெயரைக் கேட்கும் போது வைஸ்ராய் வில்லிங்டனுக்கு மிளகாய் கடித்தது போலிருக்கு மென்பதில் ஐய மில்லை. ஏனெனில் இதே வில்லிங்டன் பிரபு பம்பாய் மாகாண கவர்னரா யிருந்தபோது தான் காந்திஜி முதன் முதலில் சத்யாக்ரக இயக்கம் ஒன்றை நடத்தினர். அன்றைய தினத்திலிருந்தே வில்லிங்டனுக்கு ஆத்திரம்!

காந்திஜி விடுதலையைப் பற்றி இன்னொரு புரளியும் உலவி வருகின்றது. சீமையிலுள்ள அதிகாரிகள் காந்திஜியை விடுதலை செய்ய வேண்டு மென்று வற்புறுத்தியதாகவும், ஆனல் அந்த வில்லிங்டன் எதிர்த்ததாகவும் சொல்லப் படுகின்றது. "அது உண்மை யன்று" என டெல்லி சர்க்கார் எவ்வளவு தான் மறுத்தாலும் ஊர் வாயை மூட முடியாதல்லவா? 'டைம்ஸ்' என்ற சீமைப் பத்திரிகையில் இந்தியாவில் உத்யோகம் பார்த்த ஒருவர், 'வில்லிங்டன் போக்கு சிறு பிள்ளைப் பிடிவாதத்தைப் போல்' இருப்பதாக எழுதியுள்ளார். நிற்க,

காந்தி, காங்கிரஸ் என்ற பெயர்களைச் சொல்லும் போது சீமை 'மார்னிங் போஸ்ட்' பத்திரிகாசிரியருக்கும் மிளகாய் கடித்தாற் போலிருக்கிறதாம். அந்த ஆசிரியர் எழுதுகிறார்:

"காங்கிரஸ் என்ற பாம்பை ஆட்டி வைக்கலாமென ஸப்ரூ என்ற பாம்பாட்டி முயல்கின்றார். அதற்காக காந்தியை விடுதலை செய்ய வேண்டுமென கிளர்ச்சியும் தோன்றியுளது. ஆனல் காந்தியையும், அவரது ஆட்களையும் விட்டுவிட்டால் போச்சுது ஹிந்துஸ்தானம்! புதிய கவுன்ஸில்களை அவர்கள் முற்றுகை போட்டுப் பிடித்துக் கொள்வார்கள். ஸப்ரூ கோஷ்டி மண்ணுக்குள் போக வேண்டியதுதான், அல்லது காங்கிரஸுக்கு வால் பிடிக்க வேண்டியதுதான்!" இந்தப் பத்திரிகை ஆசிரியருக்கு என்ன காப்ரா! என்ன கலவரம்!

காந்திஜியின் சிறை வாசத்தில் அவரது அருமையான ஆயுளின் ஒவ்வொரு விநாடியையும் உலகம் கணக்கெடுத்து வருகிறது. இதை வில்லிங்டன் தெரிந்து கொள்ளட்டும்.

வெறும் "ஹம்பக்" சங்கம்

ஜினிவாவில் "ஸர்வ தேசச் சங்கம்" என்று ஒன்றிருக்கின்றது. உலகிலுள்ள பற்பல தேசங்களுக்கு அவ்வப்பொழுது ஏற்படும் சச்சரவுகளில் சமரஸம் உண்டு பண்ணுவதே இதன் தொழில் என்று சொல்லப்படுகின்றது. இந்தச் சங்கத்திற்கு ஒவ்வொரு தேசமும் ஏராளமான பணத்தை வருஷா வருஷம் கொட்டிக் கொடுக்கின்றது. அடிமை நாடாக உள்ள இந்தியாவின் செல்வத்திலும் லக்ஷக் கணக்கான பணம் இதற்காக எடுத்துக் கொடுக்கப் படுகின்றது. இந்தியாவிற்கும், இங்கிலாந்திற்கும் பல விஷயங்களில், பல உரிமைகள் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள சச்சரவுகளை நீக்க எவ்வகையிலும் பாடு படாத இச் சங்கத்திற்கு நாம் என் பணத்தை அள்ளித் தர வேண்டுமோ தெரியவில்லை?

நிற்க, இதன் செய்கைகளைக் கொண்டே இதன் பட்சபாதமான தன்மையை நாம் ஒருவாறு அறியலாம். ஒரு எண்ணெய்க் கம்பெனி சம்பந்தமாக பாரஸீகத்திற்கும், இங்கிலாந்திற்கும் ஏற்பட்டுள்ள தகராறை அனைவருமறிவர். இத் தகராறில் ஒரு ஐரோப்பியக் கம்பெனி சம்பந்தப் பட்டிருப்பதால், ஸர்வ தேசச் சங்கத்திற்கு இவ்விஷயம் மிகவும் முக்கியமானதாகப் பட்டு விட்டது. உடனே அது இதில் தலையிட்டு, ஒரு ஒப்பந்தத்தை வரைந்து இரு தேசங்களுக்கும் சமர்ப்பித் திருக்கிறது.

"ஐரோப்பியக் கம்பெனி" என்றவுடன் இந்த சங்கத்துக்கு என்ன அக்கரை? என்ன வேகம்? ஆனல் சீன-ஜப்பான் சண்டை விஷயத்தில் அவ்வளவு சிரத்தை காட்டி சண்டையைத் தீர்க்கப் பாடுபடுகின்றதா? நிற்க,

தேசத் தகராறுகளைத் தீர்த்து வைப்பதில் மேற்படி சங்கத்திற்கு அத்யந்த சிரத்தை இருப்பது உண்மையானல் தென்னப்பிரிக்காவில் பல இந்தியக் கம்பெனிகளுக்கும், லக்ஷக் கணக்கான இந்திய மக்களுக்கும், அங்கு வசிக்கும் திமிர் பிடித்த ஐரோப்பியர்கள் கொடுமை யிழைக்கும் விஷயத்தில் ஏன் அது இதுகாறும் தலையிட வில்லை? ஐரோப்பிய தேசங்களின் சாம்ராஜ்ய சலுகையை இந்தியாவிற்கும், இதர கீழ் நாடுகளுக்கும் விரோதமாகக் காக்கவே அச்சங்கம் இருந்து வருகின்றதென்பதற்கு தென்னப்பிரிக்கா விஷயத்தில் அது மௌனம் சாதித்திருப்பதை விட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? அந்த சங்கத்தின் "ஹம்பக்" இப்பொழுது விளங்குகிறதா?

டெலிபோன் தமாஷ்

சிக்கிரத்தில் லண்டனுச்கும் பூனுவுக்கும் டெலிபோன் வைக்கப்போகிருர்கள். வில்லிங்டனுடைய அபூர்வமான தொண்டை இனி லண்டன் டௌனிங் தெருவில் கேட்கும். அந்தச் சம்பாஷணை எவ்வாறிருக்கு மென்பதைப் பற்றி ஒருவர் ஒரு கற்பனை ஜோடித்திருக்கிருர். அதுபின் வருமாறு :

வைஸ்ராய் :—ஹலோ! ஹலோ! கேட்கிறதா?

மாக்டனுல்டு :—ஹாம்! ஹாம்! இது டௌனிங் தெரு! அங்கே யார் பேசறது? வில்லிங்டன் பிரபுவா?

வைஸ்ராய் :—குட் மார்னிங் மாக்டனுல்ட்!

மாக் :—'நல்ல காலே வேளை' என்கிருய். இங்கேயோ ஒரே இருட்டா யிருக்கிறது.

வை :—ஓ! மறந்து விட்டேன். அது கிடக்கட்டும். பக்கத்திலுள்ள எரவாடா சிறையில் இருக்கிருரே, இந்த காந்தி ரொம்ப தொந்தரவு தருகிருரப்பா!........இல்லே இல்லே....விடுதலேயா? ....நமது கவுரவம் என்ன ஆவது?

மாக் :—பழுத்த வயதுள்ள நீங்களே இந்த மாதிரி வருந்துவதா? நான் நல்ல கம்பங் கூத்தாடியல்லவா? சமாளிக்க மாட்டேனு? என் பேச்சுகளேக் கவனியுங்கள். நான் என்ன பகிரங்கமாக சொல்கிறேனே அவைகள் என் அந்தரங்க எண்ணங்களல்லவே.

வை :—அதிருக்கட்டும். இங்கே ஸாங்கே பிரபு வரப் போகிருரா என்ன?

மாக் :—ஊஹூம். அதெல்லாம் இல்லே. உங்களுக்குப் பிறகு அந்த வைஸ்ராய் ஆசனத்தில் நான் உட்காரலா மென ஆலோசனே செய்திருக்கிறேன். ஆனல் இந்தியாவைப் பற்றிய விஷயத்தில் இந்த சர்ச்சில் என்ற வாத்து ரொம்ப கத்துகிறது. என்னே எதிர்க்கிறது. என் செய்க?

வை :—நேரில் பிறகு பேசிக் கொள்ளலாம். 'கூட்டு பார்லிமெண்டு கமிட்டி' யென்று நான் சொன்ன உடனேயே அநேக பேர்வழிகள் அப்ளிகேஷன் போட்டிருக்கின்றனர். யார் யாரைப் பொறுக்குவ தென்று முடிவு ஏற்படவில்லே. ஆனல் கமிட்டியில் அஹமத்கான், கஸ்னுவி முதலிய பேர்வழிகளேப் போட்டால்....

மாக் :—ஐயோ பிரபுவே! நான் என்ன செய்யட்டும்? எவ்வளவு வேலே எனக்கிருக்கிறது தெரியுமா? ஆகவே இந்தியாவைப்பற்றி எதையும் என் காதில் போட வேண்டாம். 'குட் நைட்' தாத்தா? (ஸ்வராஜ்யாவில் கிளீனர்.)

பூச்சாண்டிக்கு சூடு

பிரிட்டிஷ் வியாபாரம் இந்தியாவில் படுத்து விட்டதைக் கண்டு ஏங்கிக் கொண்டிருந்த பிரிட்டிஷ் வர்த்தகர்களுக்கு சமீபத்தில் ரான்ஸிமன் என்ற வியாபார அதிகாரி ஊக்கம் கொடுத்து பேசினர்.

"இந்தியாவில் பிரிட்டிஷ் பகிஷ்கார மெல்லாம் முடிந்து விட்டது. ஆங்கிலோ இந்திய வியாபாரம் விசேஷமாக அபிவிர்த்தியாவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும் இரண்டு மூன்று வருஷங்களில் வியாபாரம் பழைய நிலேமைக்கு வந்துவிடு மென்று எதிர் பார்க்கிறேன். இந்தியாவிலும் சீனுவிலும் வசிக்கும் கோடிக் கணக்கான ஜனங்களின் வாழ்க்கையில் துளி உயர்வேற் பட்டாலும் நமது தொழில்களுக்கு உடனே அபிவிர்த்தி யுண்டு" என்று சொன்னர்.

அவர் பேச்சு ஓர் புறமிருக்க மாஞ்செஸ்டர் வியாபாரச் சங்கம் பிரமாதமாக இந்தியாவை பயமுறுத்திற்று. "பிரிட்டிஷ் சாமான்களே இந்தியா வாங்காவிட்டால் இந்தியாவுக்கு அரசியல் சீர்திருத்தம் கொடுப்பதற்கு இடைஞ்சல் செய்வோம்" என மிரட்டிற்று. இந்த மிரட்டல் உருட்டல்களுக்கு அந்த ஊரின் இன்னெரு வியாபாரியான டேல் பிராட்ஹர்ஸ்ட் லீ என்பார் சரியான சவுக்கடி தந்திருக்கிருர். லண்டனில் அவர் பேசி யிருப்பதாவது.

"இந்தத் தீர்மானத்தால் பிரிட்டிஷார் இந்தியாவைப் பலவந்தம் செய்ய வேண்டுமென மாஞ்செஸ்டர்காரர்கள் விரும்புகின்றனர். ஜப்பான் போட்டியை சுங்க வரி போட்டு ஒழிக்க வேண்டு மென்பது ஆசை போலும். ஆனல் இந்தியாவோ இப்போது பரம தரித்திரத்தில் ஆழ்ந்து கிடக்கிறது. அதை அறியாது சீமையில் நாம் ஏதாவது பிதற்றுவதா என்ன? சரியான தலேவர்கள் இங்கில்லே என்பதையே இது காட்டுகின்றது. நம்மை விடக் கேவலமான நிலேமையிலுள்ள ஓர் ஏழை ஜாதியைச் சுறண்டுவேது நமது உரிமை என்று கூறுவது போல மேற்படி தீர்மானம் இருக்கிறது."

மிஸ்டர் லீ அவர்களின் கடைசி வாக்கியத்தை நாம் போற்றுகின்றேம்.

காந்தி காந்தக் கவர்ச்சி

தென்னாப்பிரிக்காவில் மகாத்மாவுடன் தோளுக்குத் தோள் நின்று உழைத்த எச். எஸ். எல். போலக் சென்னைக்கு விஜயம் செய்து ஒரு கூட்டத்தில் பேசுகையில், காந்தி என்னும் காந்தம் தம்மைக் கவர்ந்த வகையை அறிவித்தார். அவர் சொன்னதாவது .

நான் யூதர் பரம்பரையைச் சேர்ந்தவன். ஏழைகளுக்குப் பணி செய்வதே எனது வம்சத்தாரின் தொழிலாக விருந்தது. நான் சின்னவனா யிருக்கையில், ருஷ்யாவில் என் ஜாதியார் கொடுமையாக நடத்தப்படுவதாகக் கேள்விப் பட்டேன். அங்கு ஓடி அவர்கள் துயரைத் தீர்க்க எண்ணினேன். ஆனால் பிரயாணச் சீட்டு மறுக்கப்பட்டது. ஆகவே பிறர்க்குத் தொண்டு செய்ய வேண்டுமென்ற அவாவைப் பூர்த்தி செய்வதெப்படி எனப் பார்த்தேன். இதற்குள் வியாபாரியா யிருந்த என் மாமன் என்னைத் தென்னாப்பிரிக்காவிற்கு அழைத்துப் போய் கம்பெனி வேலையில் அமர்த்தினார். தோல் நிறத்தின் வித்தியாசம் காரணமாக எனது ஜாதியினர் அங்கிருந்த இந்திய மக்களைத் துன்புறுத்தி, கொடுமையாக நடத்தி வந்ததைக் கண்ணுற்றேன். மனம் தாங்க வில்லை. ராஜாவா யிருப்பதை விட பிச்சைக்காரனாக விருப்பது எவ்வளவோ மேல் என நான் அப்பொழுது எண்ணினேன்.

பின்னர் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டேன். ஒருநாள் ஜோஹானஸ் பர்க்கில் காந்திஜி நடத்தி வந்த "இந்தியன் ஒபீனியன்" பத்திரிகையைப் படித்தேன். விவேகமும், அநுபவமும் அவர் எழுத்துக்களில் செறிந்து கிடந்தன. உடனே அவரை நேரில் காண அவாக் கொண்டேன். ஐரோப்பியரில் பலரும் அவரை மகா புருஷராக மதித்து வந்தனர். ஒரு ஹோட்டலில் ஒரு ஸ்திரீ என்னைக் காந்திஜிக்கு அறிமுகம் செய்து வைத்தாள். அக்காலத்திலேயே அவர் பெரிய மரக்கறி உணவுப் பிரசாரகரெனப் பெயர் பெற்றிருந்தார். அவருடன் பேசி சிநேகிதனானேன். 'இயற்கை வைத்தியம் பற்றி நாங்கள் பேசினோம். பிறகு காந்திஜியின் குடும்பத்தையே சேர்ந்தவனாக நான் ஆய்விட்டேன். அவர் வீட்டிலேயே தங்கினேன். கஸ்தூரிபாய்தான் எனது அன்னை; அவளே எனது தமக்கை. அவர்களோடு வாழும் போதுதான் எனக்கு கல்யாணமும் நடந்தது.

சாஸ்திரிகள் பேச்சு

மகா கனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரி ஒரு நல்ல பள்ளிக்கூட உபாத்தியாயர். அந்தத் தொழிலை விட்டு விட்டு அவர் ராஜியத்தில் ஏன் நுழைந்தாரென்று அநுதாபப்படுகின்றவர்களும் உண்டு. ஏனெனில் வாயால் சொல்வதைச் செயலில் காட்டாத ஓர் தன்மை சாஸ்திரிகளுக்கு உண்டு. அப்பேர்ப்பட்டவர் ராஜிய உலகுக்கே வந்திருக்கலாகாது. அஃது ஓர் புறமிருக்க, அவர் சென்னையில் ஓர் மாணவர் கூட்டத்தில் சமீபத்தில் கூறிய வார்த்தைகள் கவனிக்கத் தக்கவை :—

"ஒரு நாள் பரசுராமர், பீஷ்மரைக் கலியாணம் பண்ணிக் கொள்ளச் சொன்னார். விவாகம் செய்து கொள்வதில்லை யெனப் பிரதிக்ஞை கொண்டிருந்த பீஷ்மர் பரசுராமரைப் பார்த்து மிகவும் வணக்கமாக, "குரு சொல்லைச் சீடன் தட்டக் கூடாதாயினும், எனது பிரதிக்ஞையை உத்தேசித்து இவ்விஷயத்தில் உமது வார்த்தையை நான் மீற வேண்டி யிருக்கிறது" என்றார். பரசுராமர் அடங்கா கோபங்கொண்டார். பீஷ்மரைப் போருக்கழைத்தார். பீஷ்மர் தயங்கவில்லை. ஆனால் போரில் இறங்குமுன், குருவின் பாதங்களைத் தொட்டு, ஆசிர்வதிக்கக் கோரினார். இருவருக்கும் பெருஞ் சமர் நடந்தது. அது கண்டு உலகமே நடு நடுங்கியது. இறுதியில் தேவர்கள் இருவருக்கும் சமாதானமுண்டு பண்ணினர். அந்தப் பெரியாரான பீஷ்மரின் கதையை மாணவர்களாகிய நீங்கள் அறிய வேண்டும்.

உங்களுடைய ஒழிவு நேரங்களில் நீங்கள் ஏழைகளின் கஷ்டங்களை நீக்கவும், அவர்களது பசியை ஆற்றவும் வேலை செய்ய வேண்டும். ஸத்தியம், நியாயம் இவற்றிற்காகப் பாடு பட வேண்டும். கண்மூடித் தனமாக ஒரு பரம்பரக் கோட்டையே பின் பற்றிக் கொண்டிருக்கக் கூடாது. பெரியவர்களுக்கு அடங்கி நடக்க வேண்டியது தான். 100க்கு 99 இது நல்லது தான். ஆனால் ஏதேனுமொரு விஷயத்தில் மீறி நடக்க வேண்டுமென உங்கள் மனச்சாட்சி சொன்னால் நீங்கள் அங்ஙனமே செய்ய வேண்டும். பயந்து ஓடக் கூடாது. தற்காலப் பள்ளிக்கூடங்களில் சரியான கல்வி போதிக்கப்படுவதில்லை யாதலால் அவற்றினின்று வெளியேறுமாறு காந்திஜி கோருகிறார். இது சரியென உங்கள் மனதில் பட்டால் நீங்கள் அப்படியே செய்ய வேண்டும்."

வைஸ்ராய்க்கு மகாத்மா கடிதம்

டில்லி சட்ட சபையின் விவாதத்திற்கு வர விருக்கும் தீண்டாமை விலக்கு, ஆலயப் பிர வேச மசோதாக்கள் சம்பந்தமாக மகாத்மாஜி வைஸ்ராய்க்கு ஒரு கடிதம் விடுத்திருக்கிறார். தீர்க்கமான ஆலோசனைக்குப் பின்னரே அவர் இக்கடித மெழுதும் முடிவிற்கு வந்தார். செவ் வாய்க்கிழமை மாலையில் நமது பிரார்த்தனை முடிந்ததும் காந்திஜி அக் கடிதத்தைத் தயாரித் தார். அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"மகா ஜனங்களின் பெருவாரியான ஆதர வைப் பெற்றுவிட்ட இந்த ஆலயப் பிரவே சத்தை நிறைவேற்றி வைக்கத் தடையாக இருந்து வருவது பிரிட்டிஷ் டிரஸ்ட் சட்டமே என்பதை நான் பிரபல வக்கீல்கள் மூலம் தெரிந்து கொண்டேன். கவர்ன்மெண்டார் அந்த இரண்டு மசோதாக்களையும் நிறைவேற்றி அந்தத் தடையை நீக்க வேண்டும். அல்லது வேறு வழியாவது தேட வேண்டும். எரவாடா ஒப்பந்தத்தைச் சர்க்கார் ஏற்றுக் கொண்டதால் அவர்கள் சமூக, மத சீர்திருத்தத்திற்கு உறுதி கூறிய ஹிந்துத் தலைவர்களின் பிரதிநிதித்துவத் தன்மையையும் ஒப்புக் கொண்டதாகின்றது. ஆகவே அவ் வொப்பந்தத்தில் அடங்கிய உறுதிமொழி நிறைவேற இடையில் உள்ள சட்டத் தடைகளை யெல்லாம் நீக்குவது அவர்க ளது கடமையாகும்.

"இவ் விஷயத்தில் நான் என் உயிரையே பிணையாக வைத்திருப்பதால், இதில் அனுவசிய மாகத் தாமதம் செய்தால் எனக்குச் சகிக்க வொண்ணாத் துன்பம் நேரும். இம் மசோதாக் கள் சம்பந்தப்பட்ட பிரச்னை பத்திரிகைகளி லும், பொதுக் கூட்டங்களிலும் விசேஷமாக விவாதிக்கப் பட்டிருப்பதால் அவற்றை சுற்ற றிக்கை மூலம் அனுப்புவ தென்பது அநாவசி யம்."

காந்திஜியை விடுதலை செய்ய

"காந்திஜியையும், இதர பிரபல தலைவர்களை யும், ஆயிரக்கணக்கான தேச பக்தர்களையும் சிறையில் வைத்துக் கொண்டு, அவர்கள் ஒத் துழைப்பு இல்லாமல் அரசியல் திட்டத்தைத் தயாரித்தால் எதிர்காலத்தில் பலமான எதிர்ப்பு ஏற்படும்" என லண்டனிலுள்ள இந்திய சம ரஸ கோஷ்டியார் சர்க்காருக்கு எச்சரிக்கை செய்திருக்கின்றனர்.

'கேக்கப்பிக்கே' பாத்ரோ

சென்னையில் பச்சையப்பன் காலேஜில் பேசும்போது பரசுராம பாத்ரோ வட்ட மேஜை யில் காந்திஜி கலந்து கொள்ளாததைப்பற்றி ஓர் அழுகை அழுதார்.

"இந்தியாவில் பாதி பேருக்காவது காந்திஜி தலைவரா அல்லவா வென்று கேட்கிறீர்கள். ஆம். அவர் இந்தியாவின் தலைவரென்பதை ஒப் புக் கொள்ளத்தான் வேண்டும். ஆகவே தான் இரண்டாவது வட்ட மேஜைக்கு நாங்கள் அவரை அழைத்தோம். காந்திஜி 10 பேருக்கு பிரதிநிதியாயினும் சரி, அல்லது அகில இந்தியா வின் தலைவராயினும் சரி, இந்தியாவின் அரசி யல் உருப்பட வேண்டுமாயின் அவரது அபிப் பிராயத்தை அறிந்து கொள்ளாவிடின் ஒரு பிர யோசனமும் கைகூடாது" என்று கூறினார்.

இப்படி 'கேக்கப்பிக்கே' யென்று பாத்ரோ ஏன் சொல்கிறாரென்பது விளங்கவில்லை. காந் திஜி இந்தியாவின் தலைவரென்பதை இந்த பாத்ரோ உணர்ந்திருப்பாரானால் அவரை ஜெயி லில் இருக்கையில் இவர் வட்ட மேஜைக்கு என் ஓடினார்? மாணவர் கூட்டத்தில் வந்தால் ஓர் விதம் பேசுவதும், துரைமார்களைக் கண்டால் இன்னொரு விதம் பேசுவதும் என்ன சாமர்த் தியமையா?

சிறிய ஒப்பாரி

பம்பாயில் சித்திர கலாசாலை சம்பந்தமாக நடந்த ஓர் கூட்டத்தில் ஸ்ரீயுத ஜயக்கர் ஒரு சிறிய ஒப்பாரி வைத்தார். "இந்தியாவுக்குப் புதிய அரசியல் வரப் போகிறதென்று காத்தி ருக்கிறீர்கள். ஆனால் அது எப்போது வரப் போகிற தென்பது கடவுளுக்குக் கூடத் தெரி யாது" என்று கூறினார். கடவுளுக்குக் கூடத் தெரியாதவாறு பிரிட்டிஷார் வேலை செய்கிறார் களென்பது ஜயக்கரின் அபிப்பிராயமா? அல் லது கடவுளைவிட பிரிட்டிஷார் சர்வ சக்தி மான்கள் என்பது அவரது கருத்தா? எப்படி யிருந்தாலும் பிரிட்டிஷார் புதிய அரசியல் தருவ தென்பது ஒரு பகற் கனவு என்பதை ஜயக்கர் கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்திருக்கிறாப் போலிருக்கிறது. டெல்லியில் வில்லிங்டனோடு நடந்த பேச்சின் பலனை இப்படி அவர் உள றிக் கொட்டி யிருக்கிறார். இந்த ஜயக்கர், கேல்கர், ஸப்ரூ, ஆகாகான், கஸ்னவி, ராமசாமி முதலி, பாத்ரோ முதலிய வௌவால்கள் இனி ராஜீயத்தில் தலையிடாம லிருக்குமாயின் புதிய அரசியல் கைமேல் கிடைக்கும்.

மாணவர்களும் ராஜியமும்

ஜப்பானிலாகட்டும், சீனுவிலாகட்டும், துருக்கியிலாகட்டும், எகிப்திலாகட்டும், முன்னேற்றத்துக்காகப் பாடுபடும் எந்த நாட்டின் ராஜியத்திலும் அந்த நாட்டு மாணவர்களே முன்னின்று உழைத்து வருகிருர்கள். அதே போல இந்தியாவிலும் மாணவர்கள் ராஜியத்தில் கலந்து கொண்டு உழைக்க வேண்டுமென்று யாராவது சொல்லப் புகுந்தால், 'கெட்டது குடி' என்று இரைச்சலிட்டுக் கொண்டு சர்க்கார் பாய்கிறது. "மாணவர்களுக்கு ராஜிய புத்தியையே புகட்டக் கூடாது" என்று ஆங்காங்கு தலைமை உபாத்தியாயர்கள் எள்ளுருண்டைகள் போலக் குதிக்கின்றனர். சாதாரண காந்திக் குல்லா அணிந்த பையன்களை வெருட்டிய உபாத்தியாயர்களும் உண்டு. ஸைமன் பகிஷ்காரத்தில் கலந்து கொண்டதற்காக எத்தனை மாணவர்களோ கலாசாலைகளினின்று துரத்தப்பட்டனர். இவை யாவும் மாணவர்கள் ராஜியத்தில் கலந்து கொள்ளாதிருக்கச் செய்த முயற்சிகளாகும்.

டெல்லியிலிருந்து ஓர் செய்தி கிடைத்துளது. அங்கு பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் மாணவர்களுக்கும் பெண்களுக்கும் ஓர் 'வியாசப் போட்டி' நடத்த கல்வி யதிகாரிகள் முடிவு செய்திருக்கிருர்களாம். "தேச நலத்துக்கு சட்ட மறுப்பு இயக்கம் கெடுதல் விளைவிப்பது" என்ற பொருள் பற்றி வியாசம் எழுதி பரிசு பெற வேண்டுமாம்.

மாணவர்களை இவ்விஷயம்பற்றி எழுதச் சொல்வது மட்டும் ராஜீயமல்லவோ என்று சர்க்காரைக் கேட்கின்ருேம். வங்காளப் பள்ளிக்கூடங்களில் 'சட்ட மறுப்பின் தீங்கு' என்பது பற்றி தினம் உபாத்தியார்களைக் கொண்டு பிரசங்கங்கள் செய்வதற்கு ஏற்பாடாகி யிருக்கிறதாம். டெல்லி மாணவர்கள் வியாசம் எழுதுமாறு தூண்டப்படுகின்றனர். டெல்லியிலுள்ள நூற்றுக் கணக்கான மாணவர்களும், பெண்களும் இந்த வியாசப் போட்டியை வெறுப்பதாகவும், அதில் எவருமே கலந்து கொள்ள மாட்டார்களென்றும் "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" சொல்கிறது.

ஆகவே வைத்துள்ள பரிசை அதிகாரிகளாவது பங்கிட்டுக் கொள்ளலாம். இல்லா விட்டால் "அவசரச் சட்டங்களின் நன்மை" என்பது பற்றி கட்டுரைகள் எழுதி தங்களுக்குள்ளேயே பரிசைப் பரிமாறிக் கொள்ளட்டுமே!

அலங்கார ஆலோசனை

"எந்த வேஷ்டி கட்டிக்கொண்டா லென்ன? கதரா யிருந்தாலென்ன? சுதேசியா யிருந்தா லென்ன? சீமைத் துணியாய் இருந்தால் தானென்ன? ஹிருதயத்தில் மட்டும் தேச பக்தி இருந்தால் போதாதா" என்று சில சாம்பிராணிகள் மணக்கும்படி பேசுவதைக் கேட்டிருக்கிருேம். அந்தரங்கமாக மனிதனுக்கு உள்ளேயுள்ள அபிப்பிராயத்தின் அறிகுறியாகவே அவனது ஆடையு மிருக்க வேண்டும். இதாலிய விடுதலைக்காகப் போரிட்ட மாஜினி, கரிபால்டி முதலிய தேச பக்த கோஷ்டியினர் முறையே கருப்புச் சட்டை, சிகப்புச் சட்டை இவைகளையே எப்போதும் அணிந்து கொண்டிருந்தனராம். அவர்களெல்லாம் அறிவீனர்களா?

பிரிட்டிஷ் பார்லிமெண்டிலும் இந்த மாதிரி ஒவ்வொரு கட்சியினரும் ஒவ்வொரு விதமான ஆடை அணிவது என்ற இயக்கம் தோன்றியிருக்கிறது. மாக்ஸ்டனுடைய 'சுயேச்சைத் தொழிற் கட்சி'யினர் சிகப்புச் சட்டைகளை அணிந்து கொண்டு பார்லிமெண்டில் உட்காருவார்களாம். மோஸ்லீ கட்சியைச் சேர்ந்த 'பாஸிஸ்டுகள்' கருப்புச் சட்டையோடு உட்காருவார்களாம். ராஜிய மென்னும் பந்து விளையாட்டில் அந்தந்தக் கட்சியினர் ஒவ்வொரு தினுஸான ஆடை யணிந்து இறங்குவது தான் சரி.

நமது சென்னைச் சட்ட சபையைக் கவனிப்போம். காங்கிரஸிடம் அனுதாப மிருப்பதாக காட்டிக் கொள்கிறவர்கள் கதர் அணிந்து கொள்வார்க ளென்பதில் ஐயமில்லை: ஆகவே இதார்களுக்கு சட்ட சபையை அலங்காரம் செய்ய ஆலோசனை சொல்லித் தர வேண்டியிருக்கிறது. தோற்றுப் போயுள்ள முனுஸாமி நாயுடுக் கட்சியினர் கறுப்புச் சட்டை அணிந்து கொண்டு துக்கக்குறி காட்டட்டும். இப்போது மந்திரி பதவி வகிக்கும் பொப்பிலி கோஷ்டியினர் தங்கள் தலைகளில் முழ நீளம் ஒரு வெற்றிக் கொடியை நாட்டி அதில் பூச்சொருகிக் கொண்டு உட்காரட்டும். பி. டி. ராஜன், குமாரசாமி ரெட்டியார் முதலியவர்கள் பச்சோந்திகளாதலால் அவர்கள் மேகவர்ணப் புடவைகளைக் கட்டிக் கொள்ளட்டும். இதார்கள் ரவிக்கையோ, ஜாக்கெட்டோ போட்டுக் கொண்டு உட்காரட்டும். அப்போது சட்ட சபை கண்ணுக்கு ரொம்ப நன்ரு யிருக்குமே?

"தூக்கு கையை!"

ஐக்கிய மாகாண கவர்னரின் மெய் காப்பாளன் பெரிய பேர்வழியா யிருக்க வேண்டும். முனிஸிபாலிட்டியைச் சேர்ந்த ஒருவர் இதர இந்தியர்களோடு கவர்னர் 'டீ' பார்ட்டிக்கு வந்திருந்தார். அவருடைய சட்டைப் பைகளை அந்த மெய்க்காப்பாளர் சோதித்தானும். அந்த மாதிரி செய்ததற்கு பிறகு அவன் மன்னிப்புக் கேட்க வில்லே. அந்த கனவானின் தவறு என்ன வெனில் பைகளில் கையை விட்டுக் கொண்டு கவர்னரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாராம். ஆகவே சந்தேகம் வந்து விட்டது போலும்! இனி கவர்ன்மெண்டு 'டீ' பார்ட்டிக்குப் போகிற இந்தியர் உஷார்! இரண்டு கையையும் ஆகாயத்தில் தூக்கிக் கொண்டு போக வேண்டும் தெரியுமா? —அ. ப. பத்திரிகை

வந்தானே வம்பன்

கொஞ்ச நாளாக நாம் மறந்து போயிருந்த 'கிராடாக்' என்பான் மறுபடியும் சிமையில் சிலு சிலுக்க ஆரம்பித்து விட்டான். "இந்தியாவை ஒன்ருக்கி ஆண்டு வருவதற்குக் காரணம் பிரிட்டிஷார்தான். 'இந்தியர் ஒரே கூட்டத்தினர்' என்பது பொய்! பிடிவாதமாக பிரயத்தனம் செய்வது என்பது இந்தியர்களுக்கு கிடையாது. 'இந்தியன்' என்று சொல்லிக் கொள்ளவும் ஒருவனுக்கும் அந்த நாட்டில் விருப்பமில்லே" என்று பேசி யிருக்கிறன்.

இந்தியாவில் வந்து இந்தியரிட மிருந்து வசூலித்த வரிப் பணத்தில் சம்பளம் வாங்கி ஜீவித்து விட்டு மூட்டையும் கட்டிக் கொண்டு போனவர்களில் கிராடாக்கும் ஒருவன். ஆயினும் நன்றி மறந்து பேசுவதை அவன் நிறுத்தவில்லே. இந்த கிராடாக் பிறந்த பிரட்டனில் யூதர் ஜாதியினர் இல்லேயா? பிராடெஸ்டெண்டினர் இல்லேயா? கத்தோலிக்கர் இல்லேயா? ஸ்காட்ஸ் தேசத்தானுக்கும் இங்கிலீஷ்காரனுக்கும் லடாயில்லேயா? அதே மாதிரி இந்தியாவிலும் பேதாபேதங்கள் இருப்பதில் என்ன ஆச்சர்யம்? 'இந்தியன்' என்று சொல்லிக் கொள்வதில் இந்தியாவில் எவரும் பெருமை பாராட்டுவதில்லே யென கூசாது கூறும் இந்த கிராடாக் அவன் ஆண்ட நாகபுரி சிறையிலேயே நுழைந்து பார்க்கட்டும். இந்திய ஸ்வதேசி இயக்கத்தை வந்து பார்க்கட்டும். ஒன்றையும் அறியாது வாயில் வந்தபடி ஏன் இவன் இந்தியரை தூஷிக்க வேண்டும்?

உத்தியோகஸ்தர் சம்பளம்

சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சம்பளம் சென்ற வருடத்தில் பத்திலொரு பங்கு பிடிக்கப்பட்ட தல்லவா? இந்த வருடத்தில் ஐந்திலொரு பங்கைமட்டும் பிடித்தம் செய்வதென்று சர்க்கார் முடிவு செய்து விட்டார்கள். சர்க்கார் ஆபீஸில் உத்தியோகம் பார்க்கின்றவர்களுக்கு ஏதோ சிறிய லாபம் ஏற்படப்போகின்ற தென்பது வாஸ்தவம். ஆனல் இந்த கலாட்டாவில் ஏழை விவசாயியை, எவன் சர்க்காருக்கு வரிதந்து உதவி செய்து வருகிருனே அவனே மறந்துவிட வேண்டாமென எச்சரிக்கை செய்கின்றேம். சென்னே மாகாணம் சம்பந்தப்பட்ட மட்டிலாவது ஆங்காங்கு வரியை வஜா செய்து விவசாயியின் கஷ்டத்தைக் குறைத்தே தீரவேண்டு மன்றே!

தீர்மானம் துவைக்கப்பட்டது (?)

நிலத் தீர்வையை 100-க்கு 12½ வீதம் குறைக்க வேண்டு மென்று சென்னே சட்டசபை நிறைவேற்றி வைத்த தீர்மானத்தை சென்னே சர்க்கார் நிறை வேற்றி வைக்கப் போவதில்லேயாம்! அந்தத் தீர்மானம் எல்லா விடங்களேயும் பொறுத்ததாக விருப்பதால் அதை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியாதாம். எந்த குறிப்பிட்ட ஜில்லாவின் கோரிக்கைக்கு வேண்டுமானல் வரியைக் குறைப்பது பற்றி அவர்கள் யோசிப்பார்களாம். பணப் பஞ்சம் எந்த இடத்தில் இல்லே யென்பதை காட்டும்படி சர்க்காரைக் கேட்கின்றேம். நாடு முழுவதுமே பணத்துக்கு லாட்ரி யடித்துக் கொண்டிருப்பதும், 'நெல் விலே போகவில்லேயே' என்று எங்கு பார்த்தாலும் ஒரே அழுகைக் குரல் கேட்பதும் சர்க்காருக்குப் புலப்படவில்லேயே!

ராஜாஜியின் வாக்கு

"தீண்டாமை வேரூன்றிக் கிடக்குமாறு பிரிட்டிஷ் கோர்ட்டுகள் செய்து வருவதைத் தடுக்கவே நாங்கள் சட்டத்தின் உதவியை நாடுகிறேம். மத விஷயங்களில் தலே யிடுவதில்லே எனப் பிரிட்டிஷார் ஓயாமல் கத்துவது உண்மையானல் தீண்டாமை விஷயத்தில் அவர்கள் ஏற்கனவே தலே யிட்டிருப்பதேன்?"

நமது கிளிஞ்சல் குவியல்

பண்டித மாளவியா சமீபத்தில் கூட்டிய சனாதன தர்ம மகா நாட்டில் தாழ்த்தப்பட்டவர்களின் விமோசன சம்பந்தமாக நிறைவேறிய தீர்மானங்களை நவ நகர் சமஸ்தானம் அங்கீகரித்திருக்கிறது.

"தாழ்த்தப்பட்டவர்களின் கோயில் பிரவேச அசௌகர்யங்கள் நீக்கு மசோதா" என்று ஒன்றை ராஜாஜி தயாரித்து டில்லி சட்ட சபை அங்கத்தினர் அனைவருக்கும் அனுப்பியிருக்கிறார். எங்கெங்கு ஜனங்கள் விரும்புகிறார்களோ அங்கெல்லாம் கோயில் பிரவேசத்திற்கு டில்லி சட்ட சபை அநுமதி தரவேண்டுமென்று அம் மசோதா கூறுகின்றது. கயப்பிரசாத் சிங் இம் மசோதாவைப் பிரேரிக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

பொது ரஸ்தா, கிணறு, குளம் முதலியவற்றை தாழ்த்தப்பட்டவர்கள் உபயோகிக்கக் கூடாதென்று அவ்வப்பொழுது சில கோர்ட்டுகள் 144 பிறப்பிப்பதை சர்க்கார் தடுக்க வேண்டுமென்று டெல்லி சபையில் தாம் ஒரு மசோதா கொண்டுவரப் போவதாக ஸ்ரீயுத எம். ஸி. ராஜா அறிவித்திருக்கிறார்.

நாயக் என்ற ஒரு வகுப்பாரிடையே சீர்திருத்த வேலை செய்வதற்கும் சிறுமிகளுக்கு கல்வி கற்பிக்கவும் ஒருவர் பதினாயிரம் ரூபாய் அலகாபாத் சேவா சமிதியினரிடம் கொடுத்திருக்கிறார்.

காந்தி-இர்வின் ஒப்பந்தம் நடந்த காலத்தில் சிம்லாவில் ஸ்ரீமதி மோஹன்லால் என்ற பெரியாரின் கிரகத்தில் காந்திஜி தங்கியிருந்தார். அந்தப் பெரியார் பரகதியடைந்த செய்தி கேட்டு வருந்துகின்றோம்.

ஹிந்து மதத்தைச் சேர்ந்தவர்களுக்குள் விவாக ரத்து செய்துகொள்ளும் விஷயமாகச் சில சந்தேகங்கள் இருப்பதால் அவற்றை நிவர்த்திக்க ஹரி சிங் கவர் ஒரு மசோதாவைத் தயாரித்து, அதைப் பொதுக் கமிட்டியின் பரிசீலனைக்கு விட வேண்டுமெனப் பிரேரித்தது டில்லி சட்ட சபையில் நிறைவேறியது.

சுபாஷ் சந்திர போஸ் இம்மாதம் 23உ தேக நிலையை உத்தேசித்து வைத்திய சிகிச்சைக்காக ஐரோப்பாவுக்குக் கப்பலேறுகிறார்.

சென்ற டிஸம்பர் மாதத்தில் இந்தியச் சிறைகளில் 14205 ராஜீயக் கைதிகள் இருந்தனரென சர்க்கார் கணக்கு கூறுகிறது. அதில் 610 பேர் பெண்களென்றும் கூறப்பட்டுளது. சென்னை மாகாணத்தில் சிறையில் 1017 ஆண்களும் 95 ஸ்திரீகளும் இருந்ததாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள்.

9-1-33ல் சென்னையில் அன்னியத் துணிக் கடைகளை மறியலிட்ட ஏழு தொண்டர்களுக்குத் தலா 3 மாதம்.

சென்னை பார்த்தசாரதி ஸ்வாமி கோவில் தபாலாபீஸைப் பூட்டியதாக குற்றஞ் சாட்டப்பட்ட இரு காங்கிரஸ் தொண்டர்களில் ஒருவருக்கு ஒரு மாத வெறுங்காவலும் 3 மாதக் கடுங் காவலும், இன்னொருவருக்கு விடுதலை.

மதுரை மேல கோபுர வீதியில் மறியல் செய்கையில் போலீசாரால் கலைக்கப்பட்ட 3 தொண்டர்கள் அம்மன் ஸன்னிதியில் மறியல் செய்தனர். உடனே போலீசார் பிரம்புகளால் அடித்துக் கலைத்தனர்.

மேலூர் டிப்டி கலெக்டர் கோர்ட்டில், கலெக்டர் விசாரணையை நடத்திக் கொண்டிருக்கையில் காங்கிரஸ் கோஷங்கள் செய்து, ஒரு சிறிய யூனியன் ஜாக் கொடிக்குத் தீ வைக்க முயன்ற 3 தொண்டர்கள் கைதியாயினர்.

குண்டூரில் காங்கிரஸ் துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக ஒரு தொண்டருக்கு 6 மாதமும் 200 ரூ. அபராதமும்.

கள்ளிக்கோட்டையில் விதேசி ஜவுளிக் கடை மறியல் செய்த 12 தொண்டர்களைக் கைது செய்து பிறகு விடுவித்தனர்.

பம்பாயில் போலீஸ் கமிஷனரின் உத்திரவுக்குக் கீழ்ப்படியாததற்காக நீலகண்ட நாயக் என்பவருக்கு 18 மாத கடுங்காவலும் 300 ரூ. அபராதமும்.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras,